# கடலூர் பெருநகராட்சி

**2021ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27–ம் நாள் சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு இந்நகர்மன்ற இயல்புக் கூட்டம் கீழ்க்கண்ட பொருட்களை முடிவு செய்ய நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும்.**

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 27.02.2021

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் பெருநகராட்சி.

## *பொருட்கள்*

**1)** கடலூர் நகராட்சிக்கு 15வது நிதிக்குழு மானிய நிதி 2020–21ன் கீழ் குடிநீர் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு ரூ.228.64 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகராட்சிக்கு உட்பட்ட பச்சாங்குப்பம் மற்றும் கம்மியம்பேட்டை குப்பை கிடங்குகளில் உள்ள குப்பைகளை பிரித்து குப்பைக் கிடங்கினை சீர்படுத்தப்பட்டு மீண்டும் குப்பை கொட்டுவதற்கென இடம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்விடத்தில் மீண்டும் குப்பை கொட்டுவதை பொதுமக்கள் எதிர்த்து வருவதால் முக்கிய தேவையாக திடக்கழிவு மேலாண்மை பணியில் வசந்தராயன்பாளையம் பகுதியில் எரிதொட்டி கூடம் (10 TPD Incinerator Plant) அமைத்து பணி மேற்கொள்வது அவசியமானதாகும். மேலும், கோடை காலங்களில் தங்கு தடையின்றி குடிநீர் வழங்க குடிநீர் குழாய்கள் மற்றும் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட வேண்டியும் உள்ளது.

எனவே, அடிப்படை தேவைகளான மேற்படி பணிகளை 15வது நிதிக்குழு மானிய நிதி 2020–21ன் கீழ் மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 1**

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Construction of Incinerator Plant 10 TD at Vasantharayanpalayam | 100.00 |
| 2 | Providing 2 Nos. new Deep Borewell and erection of submersible pumpset with necessary accessories at Thiruanthipuram Headworks in Cuddalore Municipality | 45.00 |
| 3 | Replacement of 200 mm dia existing AC pipe to New 200 mm dia pipe at Thiruvanthipuram Head works Borewell No. old 05 in Cuddalore Municipality | 45.00 |

| | | |
|---|---|---|
| 4 | Replacement of 200 mm dia existing AC pipe to New 200 mm dia pipe at Thiruvanthipuram Head works Borewell No. old 05 in Cuddalore Municipality | 40.00 |
| | **TOTAL** | **230.00** |

மேற்படி, பணிகளில் 15வது நிதிக்குழு மானிய நிதி 2020–21ன் கீழ் அட்டவணை 1ல் காணும் வரிசை எண் 2 முதல் 4வரை உள்ள பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், அட்டவணை 2–ல் காணும் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி கோரி கடிதம் அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அட்டவணை 2**

| வ.எண் | நிர்வாக அனுமதி கோரும் பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Construction of Incinerator Plant 10 TD at Vasantharayanpalayam | 100.00 |

**அ.கு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்குறிப்பிட்ட 4 பணிகளுக்கான மதிப்பீடு ரூ.230.00 இலட்சத்தில் 15வது நிதிக்குழு மானிய நிதி 2020–21 ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.228.64 இலட்சம் போக, மீதமுள்ள தொகை ரூ.1.36 இலட்சத்திற்கான செலவினம் நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை நிலை எண் 92 நாள் 03.07.2007ன்படி 9 ஆண்டுகள் முடிவடைந்த அனைத்து கடைகளுக்கு சந்தை மதிப்பின் அடிப்படையில் 01.07.2016 முதல் 30.06.2019 வரை வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது. மூன்றாண்டு முடிவுற்ற பழைய வாடகையில் மேற்கண்ட அரசாணையின்படி 15 சதவீதம் உயர்வு செய்து 01.07.2019 முதல் 31.03.2021 வரை கேட்பு உள்ளீடு செய்யப்பட வேண்டும். எனவே, தற்பொழுது 604 எண்ணிக்கையிலான கடைகளுக்கு கேட்பில் உள்ளீடு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு.** அனுமதிக்கலாம்.

**3)** கடலூர் பெருநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் மாதாந்திர ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் சிறப்பு சேமநல நிதி சந்தாத் தொகை தலா ஒரு நபருக்கு ரூ.20/– வீதம் 148 மாதங்கள் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. 2020–21ம் ஆண்டு ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி சந்தா தொகைக்கான வட்டியும், நகராட்சி பங்குத்

| | |
|---|---|
| | தொகை ரூ.10000/—ம் வழங்குவதற்காக உத்தேச செலவினம் ரூ.5,00,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | அனுமதிக்கலாம். |
| 4) | நிவர் மற்றும் புரெவி புயல் காரணமாக பெய்த கனமழையினால் கடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. மேற்படி தேங்கிய மழைநீரினை வெளியேற்ற உழுவை வாடகைத் திட்டத்தில், கடலூர் மற்றும் விழுப்புரம் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகத்திலிருந்து உழுவையின் உதவியுடன் நீர் இறைக்கும் இயந்திரங்கள் கோரியதில், விழுப்புரம் வேளாண்மை பொறியியல் துறை அலுவலகத்திலிருந்து உழுவை எண் TN 32 G 0470 உழுவையின் உதவியுடன் நீர் இறைக்கும் இயந்திரத்தின் மூலம் நவம்பர் 25 முதல் டிசம்பர் 30 வரைக்கான நாட்களில் நீர் இறைக்கப்பட்டது. அதற்கான வாடகை கட்டணம் (ஒருமணி நேரத்திற்கு ரூ.340/— வீதம் 345 மணி நேரத்திற்கு (டீசல் உட்பட) ரூ.1,17,300/— விழுப்புரம் வேளாண்மை பொறியியல் அலுவலகத்திற்கு அவசர அவசியம் கருதி ஆணையர் / தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். |
| 5) | நிவர் மற்றும் புரெவி புயல் காரணமாக பெய்த கனமழையினால் கடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. மேற்படி தேங்கிய மழைநீரினை வெளியேற்றஉழுவை வாடகைத் திட்டத்தில், கடலூர் மற்றும் விழுப்புரம் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகத்திலிருந்து உழுவையின் உதவியுடன் நீர் இறைக்கம் இயந்திரங்கள் கோரியதில், கடலூர் வேளாண்மை பொறியியல் துறை அலுவலகத்திலிருந்து முதற்கட்டமாக உழுவை பயன்படுத்தியமைக்கு ரூ.3,68,900/—க்கு பட்டியல் வழங்கப்பட்டது. தற்போது இரண்டாம் கட்டமாக உழுவை எண் TN 31 G 0828 மற்றும் TN 38 G 0841 உழுவையின் உதவியுடன் நீர் இறைக்கும் இயந்திரங்களின் மூலம் ஜனவரி 06.2021 முதல் ஜனவரி 17.2021 வரைக்கான நாட்களில் நீர் இறைக்கப்பட்டது. அதற்கான வாடகை கட்டணம் (ஒருமணி நேரத்திற்கு ரூ.340/— வீதம் 347 மணி நேரத்திற்கு (டீசல் உட்பட) ரூ.1,17,980/— கடலூர் வேளாண்மை பொறியியல் அலுவலகத்திற்கு அவசர அவசியம் கருதி ஆணையர் / தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். |
| 6) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட அரசு தலைமை மருத்துவமனையில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் உள்ள 10 லிட்டர் மாவு அரைக்கும் கருங்கல் குழவி இரண்டு எண்ணிக்கை உடைந்ததை மாற்றம் செய்வதற்கு செலவினத் தொகை ரூ.7000/— த்தினை வருவாய் நிதியிலிருந்து பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் / ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| 7) | கடலூர் பெருநகராட்சி ஆண்டு குத்தகை இனங்களுக்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரை ஆண்டு குத்தகை இனங்கள் ஏலம் விடவும், அதற்கான செலவினத்திற்கும் இந்நகர்மன்றம் 25.01.2021ம் தேதிய தீர்மானம் எண் 3080ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அறிவிக்கை அச்சடிக்க 02.02.2021 அன்று மறுவிலைப்புள்ளி கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்டது, மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒளிப்பதிவு செய்ய ஒரு மணி நேரத்திற்கு ரூ. | புகைப்படம் தேவை எனில் ஒரு எண்ணிக்கை ரூ. |
|---|---|---|---|
| 1 | R.P.ஸ்டுடியோ & வீடியோ,<br>12 அப்பாவு தெரு,<br>புதுப்பாளையம், கடலூர் 607 001. | 1200/- | 45/- |
| 2 | சன்கிரீன் போட்டோகிராபி<br>112/38ஏ மெயின் ரோடு, புதுப்பாளையம்,<br>கடலூர் 607 001 | 1100/- | 45/- |
| 3 | சன் டிஜிட்டல் ஸ்டுடியோ & வீடியோ,<br>112/38ஏ மெயின் ரோடு, புதுப்பாளையம்,<br>கடலூர் 607 001 | 1000/- | 30/- |

மேற்படி, வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண் 3–ல் கண்ட நிறுவனம் குறைவாக விலைப்புள்ளி சமர்பிக்கப்பட்டதால், இந்நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள உத்தரவிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அ.கு. | 1. அனுமதிக்கலாம்<br>2.அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கைகள் தொடரப்பட்டதை மன்றம் ஏற்கலாம். (10308/ 2020/ அ2) |
| 8) | கடலூர் பெருநகராட்சி எல்லைப் பகுதியில் அமைந்துள்ள 45 வார்டுகளில் நகரமைப்பு பிரிவால் அனுமதியளிக்கப்பட்ட மனைப்பிரிவுகள், தெருக்கள் மற்றும் வருவாய் பிரிவிலிருந்து பெறப்பட்ட நகர்கள் மற்றும் தெருக்களில் உள்ள காலிமனை மற்றும் கட்டிடங்களுக்கு சொத்து வரி மற்றும் காலிமனை வரி நிர்ணயம் செய்ய ஏதுவாக மண்டலம் மற்றும் மண்டல மதிப்பீடு நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளதால், மேற்படி மனைப்பிரிவுகளில் அருகாமையில் உள்ள நகர் மற்றும் தெருக்களின் மண்டலம் மற்றும் மண்டல மதிப்பீட்டின் அடிப்படையில் புதியதாக உருவாகியுள்ள நகர் பிரிவிற்கு மண்டலம் மற்றும் மண்டல மதிப்பீடு நிர்ணயம் செய்ய வருவாய் அலுவலரால் குறிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்க்கண்ட நகர்களுக்கு மண்டலம் மற்றும் மண்டல மதிப்பீடு நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |

| வ. எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | சொத்து வரி | | காலிமனை வரி | |
|---|---|---|---|---|---|---|
| | | | மண்டலம் | மதிப்பு | மண்டலம் | மதிப்பு |
| 1 | 8 | லோகநாதன் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 2 | 8 | மாருதி கார்டன் | C | 1.05 | C | 0.20 |
| 3 | 9 | சண்முகா நகர் | C | 1.05 | C | 0.20 |
| 4 | 14 | ஸ்ரீமூகாம்பிகை நகர் | C | 1.05 | C | 0.20 |
| 5 | 14 | அண்ணாமலை நகர் விரிவு | C | 1.05 | C | 0.20 |
| 6 | 28 | தையல்நாயகி நகர் | C | 1.05 | C | 0.20 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | 22 | ரத்தினசபாபதி நகர் விரிவு | C | 1.05 | C | 0.20 |
| 8 | 23 | அமுதா கார்டன் | C | 1.05 | C | 0.20 |
| 9 | 29 | வசந்தம் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 10 | 32 | குறிஞ்சி நகர் | C | 1.05 | C | 0.20 |
| 11 | 32 | கணபதி நகர் | C | 1.05 | C | 0.20 |
| 12 | 32 | செல்வகணபதி நகர் | C | 1.05 | C | 0.20 |
| 13 | 32 | கடல் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 14 | 32 | ஜெ.ஜெ.நகர் | C | 1.05 | C | 0.20 |
| 15 | 31 | சகுந்தலா அம்மாள் நகர் | C | 1.05 | C | 0.20 |

**அ.கு.** அனுமதிக்கலாம். **( 6606/ 2015/ அ1)**

**9)** கடலூர் நகராட்சிக்கு பொதுமக்கள் செலுத்தும் சொத்து வரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி, நகராட்சி கடை வாடகை, பாதாள சாக்கடை கட்டணம், தொழில் உரிமக் கட்டணம் ஆகியவற்றை கொண்டே கடலூர் நகரில் அன்றாட அடிப்படை வசதிகளுக்கான செலவினங்கள், தெருவிளக்கு மற்றும் குடிநீரேற்றம் செய்வதற்கான மின் கட்டணம், நகரில் குடி .ரேற்றம் செய்வதற்கு குடிநீர் வடிகால் துறைக்கு செலுத்த வேண்டிய குடிநீர் கட்டணம், குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள், பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள், தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகள், வாகனங்களுக்கான எரிபொருள் செலவினங்கள், பணியாளர்களுக்கான ஊதியம் போன்ற செலவினங்கள், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது வரை கடலூர் நகராட்சிக்கு **12.67** சதவீத வரித் தொகைகளே மக்களால் செலுத்தப்பட்டுள்ளது. வார்டு வாரியாக பொதுமக்களால் செலுத்தப்படாமல் உள்ள வரி கட்டண தொகைகளை மக்கள் அறியும் வண்ணம் முன்னணி நாளிதழ்களில் வெளியிடவும், அதற்குண்டான தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.** அ) அனுமதிக்கலாம்.
ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை தொடரப்பட்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்ம் **(3388/ 2018/ அ1 )**

**10)** கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட மஞ்சக்குப்பம் கிராமம், வில்வராயநத்தம் கிராமம், வார்டு 7, பிளாக் 22, நகர நிலஅளவை எண்.**1690, 1693, 1694, 1695, 1696, 1697, 1698, 1699, 1710/1**–ல் **75217.50** ச.மீ. **(18.58** ஏக்கர்**)** பரப்பளவில் புதிய நவீன பேருந்து நிலையம் அமைக்க கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.வி2/ **16955/ 2018** நாள் **26.06.2020**ல் முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டது. இவ்விடம் இந்நகராட்சி நகரமைப்பு பிரிவு மூலம் அளவீடு செய்யப்பட்டு கற்கள் நடப்பட்டுள்ளது. இவ்விடத்தினை சுற்றி உடன் வேலி அமைத்திட மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தியதன் பேரில், இவ்விடத்திற்கு கம்பி வேலி அமைக்கும் பணி ரூ.**9,90,000/–** (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொன்னூராயிரம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** **1.** மன்றம் அனுமதிக்கலாம்
**2.** பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| 11) | கடலூர் பெருநகராட்சி பகுதியில் புதிய நவீன பேருந்து நிலையம் அமைவிடத்தினை சுற்றி கம்பி வேலை அமைக்கும் பணி ரூ.9,90,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொன்னூராயிரம் மட்டும்) மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 27.01.2021ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளுக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, பாகூர் | 0.05 % மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு.டி.சேஷாத்திரி, கடலூர் | 0.46% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, பாகூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.05 % மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, பாகூர் என்கிற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அ.கு. | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 12) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட ஆணையாளர் மற்றும் பொறியாளர் குடியிருப்புகள் பராமரிப்பு பணி ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 13) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட ஆணையாளர் மற்றும் பொறியாளர் குடியிருப்புகள் பராமரிப்பு பணி ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 23.11.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, பாகூர் | 0.03 % மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு. பி.பற்குணன், கடலூர் | 1.20 % மதிப்பீட்டை விட அதிகம். |

| | |
|---|---|
| | மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, பாகூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.03 % மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, பாகூர் என்கிற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 14) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 12 எண்ணிக்கை ஆழ்துளை கிணறு நீர்முழ்கி மோட்டார்களையும் மற்றும் அங்குள்ள அனைத்து உயர்நிலை, கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு படுகைகளை ஜனவரி 2021 முதல் மார்ச் 2021 வரையிலான மூன்று மாதத்திற்கு இயக்கி பராமரித்தல் செய்யும் பணிக்கு ரூ.3.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றஅனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1, மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசரம் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 15) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து குடிநீர் பெறுகின்ற திருப்பாப்புலியூர், கம்மியம்பேட்டை, தீபன் நகர், காமராஜர் நகர், தேவனாம்பட்டினம், தேவனாம்பட்டினம் சுனாமி குடியிருப்பு, பத்மாவதி நகர், நேரு நகர் ஆகிய மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் கூத்தப்பாக்கம், குண்டுசாலை வீட்டுவசதி வாரிய குடியிருப்பு ஆகிய கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் அதற்கான மோட்டார்கள் வால்வுகளை ஜனவரி 2021 முதல் மார்ச் 2021 வரையிலான மூன்று மாதத்திற்கு இயக்கி பராமரித்திட பணியாளர்கள் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.5.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1, மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசரம் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 16) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட கேப்பர்மலை தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 11 எண்ணிக்கை 25 HP ஆழ்துளை கிணறு நீர்முழ்கி மோட்டார்களையும் மற்றும் அங்குள்ள அனைத்து உயர்நிலை, கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு படுகைகளை ஜனவரி 2021 முதல் மார்ச் 2021 வரையிலான மூன்று மாதத்திற்கு இயக்கி பராமரித்திட பணியாளர்களை விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.3.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் |

| | |
|---|---|
| | வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றஅனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1, மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசரம் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 17) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட கேப்பர்மலை தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து சரவணா நகர், சோனாங்குப்பம், பச்சையாங்குப்பம், சிவானந்தபுரம், ஏணிக்காரன் தோட்டம், சுனாமி குடியிருப்பு ஆகிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் வண்டிப்பாளையம், செல்லங்குப்பம், வில்வநகர் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு ஆகிய கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் அதற்கான மோட்டார்கள் வால்வுகளை ஜனவரி 2021 முதல் மார்ச் 2021 வரையிலான மூன்று மாதத்திற்கு இயக்கி பராமரித்திட பணியாளர்கள் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.5.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1, மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசரம் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 18) | கடலூர் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து குடிநீர் பெறுகின்ற திருப்பாப்புலியூர், கம்மியம்பேட்டை, தீபன் நகர், காமராஜர் நகர், தேவனாம்பட்டினம், தேவனாம்பட்டினம் சுனாமி குடியிருப்பு, பத்மாவதி நகர், நேரு நகர் ஆகிய மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் கூத்தப்பாக்கம், குண்டுசாலை வீட்டுவசதி வாரிய குடியிருப்பு ஆகிய கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் அதற்கான மோட்டார்கள் வால்வுகளை ஜனவரி 2021 முதல் மார்ச் 2021 வரையிலான மூன்று மாதத்திற்கு இயக்கி பராமரித்திட பணியாளர்கள் விநியோகம் செய்யும் பணியினை ரூ.5.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 31.12.2020–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.<br><br>(அட்டவணை கீழே)<br><br>மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு.T. சேஷாத்திரி, கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி 0.02% மதிப்பீட்டை விட குறைவு (ரூ. 3,98,430.00) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள . திரு.T. சேஷாத்திரி, கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதியும், மேலும் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு.T. சேஷாத்திரி ,கடலூர் | 0.02% (ரூ. 3,98,430.00) மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு .S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர்.. | 0.05%(ரூ. 3,98,700.00 மதிப்பீட்டை விட அதிகம். |

**19)** கடலூர் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 12 எண்ணிக்கை ஆழ்துளை கிணறு நீர்முழ்கி மோட்டார்களையும் மற்றும் அங்குள்ள அனைத்து உயர்நிலை, கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு படுகைகளை ஜனவரி 2021 முதல் மார்ச் 2021 வரையிலான மூன்று மாதத்திற்கு இயக்கி பராமரித்தில் செய்யும் பணியினை ரூ.3.90 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 31.12.2020–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு.T. சேஷாத்திரி ,கடலூர் | 0.06% (ரூ. 2,98,344.00) மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு .S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர்.. | 0.07%(ரூ.2,98,740.00 மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு.T. சேஷாத்திரி, கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி 0.13% மதிப்பீட்டை விட குறைவு (ரூ. 2,98,344.00) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T. சேஷாத்திரி, கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதியும், மேலும் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்.

**20)** கடலூர் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட கேப்பர்மலை தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 11 எண்ணிக்கை 25 HP ஆழ்துளை கிணறு நீர்முழ்கி மோட்டார்களையும் மற்றும் அங்குள்ள அனைத்து உயர்நிலை, கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு படுகைகளை ஜனவரி 2021 முதல் மார்ச் 2021 வரையிலான மூன்று மாதத்திற்கு இயக்கி பராமரித்திட பணியாளர்களை விநியோகம் செய்யும் பணியினை ரூ.3.90 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 31.12.2020–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு.T. சேஷாத்திரி ,கடலூர் | 0.06% (ரூ. 2,98,344.00) மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு .S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர். | 0.07%(ரூ.2,98,740.00 மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு.T. சேஷாத்திரி, கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி 0.06% மதிப்பீட்டை விட குறைவு (ரூ. 2,98,344.00) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள . திரு.T. சேஷாத்திரி, கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதியும், மேலும் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்.

**21)** கடலூர் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட கேப்பர் மலை தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து சரவணா நகர், சோனாங்குப்பம், பச்சையாங்குப்பம், சிவானந்தபுரம், ஏணிக்காரன்தோட்டம், சுனாமி குடியிப்பு ஆகிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் வண்டிப்பாளையம், செல்லங்குப்பம், வில்வநகர் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு ஆகிய கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் அதற்கான மோட்டார்கள் வால்வுகளை ஜனவரி 2021 முதல் மார்ச் 2021 வரையிலான மூன்று மாதத்திற்கு இயக்கி பராமரித்திட பணியாளர்கள் விநியோகம் செய்யும் பணியினை ரூ.5.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 31.12.2020—ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு.T. சேஷாத்திரி ,கடலூர் | 0.02% (ரூ. 3,98,430.00) மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு .S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர். | 0.05%(ரூ. 3,98,700.00 மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு.T. சேஷாத்திரி, கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி 0.02% மதிப்பீட்டை விட குறைவு (ரூ. 3,98,430.00) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள . திரு.T. சேஷாத்திரி, கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதியும், மேலும் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்.

**22)** கடலூர் பெருநகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் TN 31 F 7171 பதிவெண் கொண்ட ஈப்பிற்கு ஆயுள் காப்பீடு 30.03.2021 உடன் முடிவடைவதால் 31.03.2021 முதல் 30.03.2022 வரை ஆயுள் காப்பீட்டை புதுப்பிக்க ஆகும் செலவினம் ரூ.11,442/—க்கு நிர்வாக அனுமதியும், இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** 1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மன்ற அனுமதியை எதிர்நோக்கி மேற்படி தொகை ரூ.11492/— ஐ நேஷனல் இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்தியதை அங்கீகரிக்கலாம்.

**23)** கடலூர் பெருநகராட்சிக்கு சொந்தமான ஆண்டுக் குத்தகை இனங்கள் 2021 முதல் 2023—24 வரை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர இந்நகர்மன்றம் தனது தீர்மான எண் 3080 நாள் 25.01.2021 ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் இனம் எண் 13 தேவனாம்பட்டினம் கடற்கரையில் இரு சக்கர வாகனம், மூன்று சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்க கீழ்க்கண்டவாறு ஏலம் கோரியது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை.

| வ. எண் | ஏலத்தில் கலந்து கொண்டவர் பெயர் மற்றும் விலாசம் | ஏலத் தொகை ரூ. |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | திரு.முத்து, த/பெ.தனஞ்செயன்,<br>தெற்கு கடற்கரை சாலை, தேவனாம்பட்டினம் | 5,55,000/– |
| 2 | திரு.க.குமணன், த/பெ.கணபதி,<br>தெற்கு கடற்கரை சாலை, தேவனாம்பட்டினம் | 5,55,500/– |

மேற்கண்டவாறு வரிசை எண் 2ல் கண்ட ஏலதாரர் கோரிய தொகை ரூ.5,55,500/– கடந்த 3 ஆண்டு சராசரி தொகை ரூ.4,49,943/–ஐ விட கூடுதலாக உள்ளது. கடந்த ஆண்டு 2020–2021 ம் ஆண்டு உரிமத் தொகை ரூ.4,72,065/– ல் 5% உயர்வு செய்து ரூ.4,95,670/– ஐ விட கூடுதலாக உள்ளது.

எனவே, உயர்ந்த பட்ச ஏலம் கோரிய திரு.க.குமணன், த/பெ.கணபதி, என்பவருக்கு 01.04.2021 முதல் குத்தகை உரிமம் வழங்கலாம். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கலாம்.

| | |
|---|---|
| அ.கு. | 1. அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர்(ம) ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடி.க்கை தொடரப்பட்டதை மன்றம் ஏற்கலாம். (1572/ 2021/ அ2 ) |
| 24) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட 45 வார்டுகளிலும் ஆக்கிரமிப்பு மற்றும் பிற பொருள் தொடர்பாக கடலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பிற நீதிமன்றங்கள் மற்றும் சென்னை உயர் நீதிமன்றத்திலும் நகராட்சி ஆணையர் அவர்களை பிரதிவாதியாக சேர்த்து அவ்வப்போது வழக்குகள் தொடரப்பட்டு வருவதால், உடனுக்குடன் வழக்கறிஞர்கள் ஆஜராகவும், நீதிமன்றக் கட்டணம் மற்றும் வழக்கறிஞர்களுக்கு உரியதொகைகள் வழங்குவதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே, நகரமைப்பு பிரிவு சம்பந்தப்பட்ட கடலூரில் தொடரப்படும் வழக்குகளுக்கு நகராட்சி சார்பாக நகர்மன்ற வழக்கறிஞர் ஆஜராகவும், சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்படும் வழக்குகளுக்கு நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ஆஜராகவும், ஜனவரி 2021 முதல் டிசம்பர் 2021 வரையிலான காலங்களில் தொடரப்படும் அனைத்து வழக்குகளுக்கும் மற்றும் வழக்கறிஞர்களுக்கான தோராய செலவினம் ரூ.2.00 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவு செய்துகொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| அ.கு. | அ) அனுமதிக்கலாம்.<br>ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் ஏற்கலாம். ( 1572/ 2021/ அ2 ) |
| 25) | கடலூர் பெருநகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் ஜேசிபி TN 31 AA 4948 என்ற வாகனத்தின் பேரிங் மற்றும் அப்பு அசம்பலி கம்மியம்பேட்டை கம்போஸ்டில் பணி மேற்கொள்ளும் பொழுது பழுதடைந்த காரணத்தால், ஜேசிபி கம்பெனி DYNATECH–ல் மேற்கண்ட வாகனத்தின் பழுது நீக்க பணிகளை மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது இடது பக்க அப்பு முழு அசம்பலி செட்டும் புதியது மாற்றினாலே ஜேசிபி நல்ல நிலையில் இயங்கும் என கம்பெனியில் கூறியுள்ள காரணத்தால் ஜேசிபி–ன் புதிய அசம்புலி செட் முழுவதும் மாற்றியமைத்திட விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட TN 31 AA 4948 ஜேசிபி வாகனத்தின் பழுதுநீக்க பணிகளான இடதுபக்க அப்பு செட் முழுவதும் மாற்றுவது மற்றும் அதற்கான கட்டணம் ஆகியவை சேர்த்து DYNATECH–ஜேசிபி கம்பெனியால் வழங்கப்பட்ட விலைப்புள்ளி தொகை ரூ.1,12,319/– க்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும், அதற்கான பணி உத்தரவு மற்றும் செலவினத் தொகை ரூ.1,12,319/–.க்கான காசோலையை ஜேசிபி கம்பெனி DYNATECH–க்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. |

| | |
|---|---|
| அ.கு. | அவசியம் அவசரம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். (141/ 2020/ எச் 2) |
| 26) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட கம்மியம்பேட்டை எரிவாயு தகனமேடை தனியார் அமைப்பின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இப்பராமரிப்பு பணியானது மே 2020 உடன் முடிவடைவதால் இப்பணியினை ஓராண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி ரூ.9,50,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | அ) அனுமதிக்கலாம்<br>ஆ) அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம். |
| 27) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட கம்மியம்பேட்டை எரிவாயு தகனமேடை தனியார் அமைப்பின் மூலம் ஓராண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி ரூ.9,50,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 27.05.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | M/s.MHT Engineering, Chennai | 0.13 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | M/s. Yes Yes Jee Engineering Chennai | 4.86 % மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட M/s.MHT Engineering, Chennai என்ற நிறுவனம் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (மதிப்பீட்டை விட 0.02% குறைவு ) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.MHT Engineering, Chennai என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். |
| 28) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட திருப்பாதிரிப்புலியூர், கேசவ நகர் நகரளவை தொகுதி எண் 5, பகுதி எண் 35, நகரளவு எண் 1260/1 ல் திரு.கேசவ பிள்ளை அவர்களால் LPH/ DDTP (SCR) No. 2/ 1970 உத்தரவு எண் ROC F1/1104/71 நாள் 04.12.1971ன்படி மனைப்பிரிவு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள 5315 சதுர அடி இடத்தை நகராட்சி வசம் ஒப்படைக்கப்படவில்லை.<br>இந்நிலையில் கேசவ நகர் மனைப்பிரிவு, குடியிருப்போர் நலச் சங்கம் மூலமாக, அந்நகர் பூங்காவிற்கான இடத்தினை மேம்படுத்தி தரவும் அல்லது அவர்களே மேம்படுத்திக் கொள்ள அனுமதி கோரியதன் அடிப்படையில் இடம் ஆய்வு செய்யப்பட்டு மாண்புமை உயர்நீதி மன்ற பேராணைகள் 156/ 2000 மற்றும் 45/ 2003ன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.<br>மேற்படி பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் ஆக்கிரமிப்பு கண்டறியப்பட்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன்படி 15 நாள் கெடு விதித்து |

<table>
<tr><td></td><td>அறிவிப்பு வழங்கப்பட்ட நிலையில் கேசவ நகர் மனைப்பிரிவு குடியிருப்போர் நல சங்கத்தினர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். மேற்படி வழக்கு வருகின்ற 03.03.2021 அன்று விசாரணைக்கு வரவுள்ளது. தற்பொழுது மனைப்பிரிவில் உள்ள குழந்தைகள் விளையாடும் இடத்தில் ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றப்பட்டு விட்டது. மேலும் மேற்படி இடத்தை குழந்தைகள் விளையாடும் இடமாக அபிவிருத்தி செய்ய இந்நகராட்சியால் ரூ.17.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதியும், தற்போது நகராட்சியில் போதுமான நிதியில்லாததால், ரூ.17.00 இலட்சத்தினை ஏதேனும் ஒரு திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து தரக் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி கோரி கடிதம் அனுப்பவும் மனறத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td></tr>
<tr><td>அ.கு.</td><td>மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>29)</td><td>கடலூர் பெருநகராட்சி, பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு TN 31 F 7171 பதிவெண் கொண்ட வாகனம் 2006ம் ஆண்டில் வாங்கப்பட்டு தற்போது 15 வருடங்கள் முடிவடைந்துள்ளன. இதனால் இன்ஜின் முழுமையாக ஓவராலிங் செய்தல், பம்ப் மற்றும் நாசல் ஓவராயிலிங் செய்தல் மற்றும் டிங்கரிங் செய்து ஈப்பு முழுமையாக பெயிண்டிங் செய்தல் (FC உட்பட) பெயிண்டிங் செய்யும் பணிக்கு ரூ.1.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதியும், இப்பணியினை மேற்கொண்ட பின்னர்தான் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உரிய அனுமதி பெற முடியும். எனவே, இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td></tr>
<tr><td>அ.கு.</td><td>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசரம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>( 408/ 2021/ இ2)</td></tr>
<tr><td>30)</td><td>கடலூர் பெருநகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு TN 31 F 7171 பதிவெண் கொண்ட வாகனத்திற்கு இன்ஜின் முழுமையாக ஓவராயிலிங் செய்தல், பம்ப் மற்றும் நாசல் ஓவராயிலிங் செய்தல், கிளர்ட்ச் கவர் அசெம்பளியுடன் பிளேட் மாற்றி சிலிண்டர்கள் மாற்றுதல், செல்ப் மோட்டார் ஓவராயிலிங் செய்தல் மற்றும் டிங்கரிங் செய்து ஈப்பு முழுமையாக பெயிண்டிங் செய்தல் (FC உட்பட) பெயிண்டிங் செய்யும் இப்பணிக்கு 22.02.2021–ம் தேதி விலைப்புள்ளி பெறப்பட்டதில், பெறப்பட்டுள்ள இரண்டு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்ட விபரப்படி உள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீட்டு விகிதத்திற்கு</th></tr>
<tr><td>1.</td><td>M/s. சரவணா ஆட்டோமொபைல்ஸ், கடலூர்</td><td>ரூ.1,69,500.00<br>மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>M/s. ஸ்ரீலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், கடலூர்</td><td>ரூ.1,75,000.00<br>மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
<tr><td>3.</td><td>M/s. விநாயகா ஆட்டோ கேரேஜ், கடலூர்</td><td>ரூ.1,76,000.00<br>மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட M/s. சரவணா ஆட்டோமொபைல்ஸ், கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான விலைப்புள்ளி ரூ.1,69,500,00 மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த</td></tr>
</table>

| | |
|---|---|
| | தொகைக்கான விலைப்புள்ளி அளித்துள்ள M/s. சரவணா ஆட்டோமொபைல்ஸ், கடலூர் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு | 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். ( 408/ 2021/ இ2) |
| 31) | கடலூர் பெருநகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்கள் 2021–2022 முதல் 2023–2024 வரை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர இந்நகர்மன்றம் தனது தீர்மான எண் 3080 நாள் 25.01.2021 ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. ந.க. எண் 10308/ 2020/அ2 ஆண்டுக் குத்தகை இனம் 1 முதல் 12, 13, 14, 15 மற்றும் 16 வரை 23.02.2021ல் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் இனம் எண் 5 திருப்பாப்புலியூர் மச்ச நாளங்காடியில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (வட பகுதியில் உள்ள 8கடைகள் நீங்கலாக) கட்டணம் வசூலிக்க கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை.<br><table><tr><th>வ. எண்</th><th>ஏலத்தில் கலந்து கொண்டவர் பெயர் மற்றும் விலாசம்</th><th>ஏலத் தொகை ரூ.</th></tr><tr><td>1</td><td>திரு.தனசேகர், 181, சுனாமி நகர், தேவனாம்பட்டினம்</td><td>1,61,000/–</td></tr><tr><td>2</td><td>திரு.ஜவான், த/பெ.ரவி, 5 சுனாமி நகர், தேவனாம்பட்டினம்</td><td>1,60,600/–</td></tr></table>மேற்கண்டவாறு வரிசை எண் 1ல் கண்ட ஏலதாரர் கோரிய தொகைரூ.1,61,000/– கடந்த 3 ஆண்டு சராசரித் தொகை ரூ.1,38,135/– ஐ விட கூடுதலாக உள்ளது. கடந்த ஆண்டு 2020–2021ம் ஆண்டு உரிமத் தொகை ரூ.1,44,979/–ல் 5% உயர்வு செய்து ரூ.1,52,228/– ஐ விட கூடுதலாக உள்ளது.<br>எனவே, உயர்ந்த பட்சம் ஏலம் கோரிய திரு.க.தனசேகர் என்பவருக்கு, 01.04.2021 முதல் ஓராண்டுக்கு மேற்கண்ட குத்தகை இனத்திற்கு கட்டணம் வசூலிக்க உரிமம் வழங்கலாம். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| அ.கு. | 1. அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் ஏற்கலாம். (1573/ 2021/ அ2) |
| 32) | கடலூர் பெருநகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்கள் 2018–2019 முதல் 2020–2021 வரை இனம் எண் 13 பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்க 2018–19 முதல் 2020–2021 வரை குத்தகைக்கு எடுத்த திரு.அமிர்தராஜ் த/பெ.ஆறுமுகம் என்பவர் குத்தகை உரிமம் பெற்றார். அன்னார் 2018–19 முதல் 2019–20 வரை குத்தகையை அனுபவித்து விட்டு 2020–2021 ஆண்டுக்கு புதுப்பிக்க உரிய தொகை செலுத்தி விண்ணப்பிக்கப்படாமல், தனக்கு நஷ்டம் ஏற்படுகிறதென்று 2020–2021 ஆண்டுக்கு குத்தகை தொகை செலுத்தாமல் மேற்படி குத்தகை உரிமை வழங்க கடலூர் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 483/2019 வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் நகராட்சி சார்பாக திரு.எஸ்.சச்சிதானந்தம் ஆஜரானார். இந்த வழக்கிற்கு (IA No. 234/ 2019 O.S.No.484/ 2019 PSJ கடலூர் ) வழக்கு கட்டணம் ரூ.6000/– வழங்க தனது 05.02.2021 கடிதத்தில் கோரியுள்ளார்.<br>மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |

| | |
|---|---|
| அ.கு. | **1.** அனுமதிக்கலாம்<br>**2.** அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க. எண் 10933/ 2017/ அ2) |
| **33)** | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட மஞ்சக்குப்பம் எரிவாயு தகனமேடை தனியார் அமைப்பின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இப்பராமரிப்பு பணியானது மார்ச் **2021** உடன் முடிவடைவதால் இப்பணியினை ஓராண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி ரூ.**9,50,000/–** (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருநது மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | **1.** மன்றம் அனுமதிக்கலாம்<br>**2.** பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| **34)** | இந்நகராட்சியில் **2007–08** முதல் **2019–2020** வரை **13** ஆண்டுகளுக்கு இருப்பில் உள்ள சேமநல நிதிக்கான வட்டியினை கணினியில் கணக்கிட்டு தர சாப்ட்வேர் நிறுவனங்களிடம் இருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில், **14.12.2020** அன்று கீழ்க்கண்ட **3** விலைப்புள்ளிகள் வரப் பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. |

| Sl. No. | Name of the Organization | Rate (One year per employee) Rs. | Rate per year (Abstract & proposal) Rs. | Printing charges per page Rs. |
|---|---|---|---|---|
| 1 | M/s. RajRev Systems, No.2 Muthaiyal Reddy Nagar, IIIrd Street, Adambakkam, Chennai 88 | 50/- | 8000/- | 3/- |
| 2 | M/s.N Tech Solutions, 10 Gowthamar Street, East Tambaram, Chennai 59 | 55/- | 8500/- | 3.50 |
| 3 | Venkat Events, No.13, Velu Nagar Extn. (Near DAV School) Adambakkam, Chennai 88 | 60/- | 9000- | 3.90 |

| | |
|---|---|
| அ.கு. | **1)** மேற்படி வரப் பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.RajRev Systems, Chennai -88 நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>**2)** அவசர அவசியம் கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலர் மற்றும் ஆணையரின் முன்அனுமதி பெற்று இந்நகராட்சி பணியாளர்களுக்கு சேமநலநிதி மீதான வட்டியினை **13** வருடங்களுக்கு கணக்கிட்டு தர M/s. RajRev Systems, Chennai 88 நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதற்கும் அதற்காகும் தோராய செலவின தொகை ரூ.**3.00** இலட்சத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். **( 9937/ 2020/ பி2 )** |
| **35)** | இந்நகராட்சியில் புதிய கணக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால், **2020–2021**ம் ஆண்டு கணக்குகள் முடித்து அதனை உள்ளாட்சி துறை தணிக்கைக்கு அனுப்பப்பட வேண்டியுள்ளது. மேற்படி கணக்குகளை ஆய்வு செய்து அதில் கூறப்படும் பல்வேறு |

| | |
|---|---|
| | குறைபாடுகளை நிவர்த்தி செய்து மீள சமர்ப்பிக்கவும், அக்கணக்குகளை சரியான முறையில் முடித்துக் கொடுக்க உள்ளூர் நிறுவன கணக்கு ஆலோசகர்களிடம் கணக்குகளை சரிசெய்யவும், அதற்கான விலைப்புள்ளி பெறுவதற்கும், அதற்கு தேவைப்படும் தோராய செலவினத் தொகை ரூ.55000/-க்கு மேற்படி வரப்பட்ட கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. |

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஆதவ் சொலுஷன், 154 எப் 5 திருச்சி மெயின் ரோடு, விழுப்புரம் | 55000/- |
| 2 | அகல்யா இன்போடெக், 53 எம்.ஆர்.கே. தெரு, விழுப்புரம். | 57500/- |
| 3 | ராம்ஜி இன்போசிஸ், 288 கே.கே.ரோடு, விழுப்புரம், | 60000/- |

| | |
|---|---|
| அ.கு. | 1. மேற்படி வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளின் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s.ஆதவ் சொலுஷன், விழுப்புரம் அவர்களின் விலைப்புள்ளிக்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். |
| 36) | கடலூர் பெருநகராட்சியின் 2020-2021ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு மற்றும் 2021-2022ம் ஆண்டிற்கான உத்தேச மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் பதிவு செய்யலாம். |
